3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பேரவை முன் வைக்கப்பெறும் அரசாணைகள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் ''பேப்பர்ஸ் டு பி லெய்ட் ஆன் தி டேபிள்'' என்று ஒன்று இருக்கிறது. கவர்ன்மென்ட் ஜி.ஓ.க்கள் பாஸ் பண்ணி பப்ளிஷ் ஆன உடனேயே அசெம்பிளி டேபிள்மீது உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்க வேண்டும். ஆனால் இங்கே மிகவும் அநியாயம் நடக்கிறது. 1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் நாளிலே பாஸ் பண்ணிய ஜி.ஓ.வை 81வது ஆண்டு 22ஆம் தேதி கொண்டு வந்து வைக்கிறார்கள். அப்படி வைத்தால் இந்த அவைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? அலுவலர்களுக்கு இந்த ஹவுஸ் என்றால் பயம் இருக்க வேண்டாமா? அமைச்சர்களும் தங்கள் தங்கள் துறை சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்தும் டிலே ஆகாமல் வைக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டாமா? இது நான் என்னுடைய கடமையை செய்வதிலிருந்தும் தடுக்கிறதே. 79–லே பாஸ் ஆனதைக் கொண்டு வந்து 81–லே வைத்தால் மாடிபிகேஷன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் எப்படிக் கொடுப்பது இப்போது ஆரம்பிக்கப்பட்ட அவைத் தொடரின் காலமும் முடியப் போகிறது. எப்படி மாடிபிகேஷன் கொடுப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கூட்டத் தொடர் வரை கொடுப்பதற்கு அலுவலர்களுக்கு அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது..........

திரு. ரா. உமாநாத் : 19—11—1979 அன்று தந்தை பெரியார் அண்ணா யூனிவர்சிட்டீஸ் சர்வீஸ் ரூல்ஸ் சம்பந்தமான பேப்பர்கள் 9—7—1980-லே அவையிலே வைக்கப்பட்டது. அதற்கு 10—7—1980-லே மாடிபிகேஷன் கொடுத்தேன். இன்று வரையில் வரவில்லை. Why don't they keep it before the House at the next Session. Can the department take us for a ride? அதிகாரிகள் அந்த அளவில் இருக்கிறார்கள். அமைச்சர்களும் இதை கவனிக்க வேண்டாமா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது வழி காண வேண்டும். அரசாங்கத்தின் சார்பாக இதற்கு பொறுப்பேற்று ஏதாவது சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒட்டு மொத்தமான அவையின் பிரச்னை. ஆபீசர்கள் இந்த அவை உறுப்பினர்களான நம்மை டாமினேட் செய்ய விடக் கூடாது? இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் நம்மை கட்டுப்படுத்துகிறார்கள் என்கிற எண்ணத்தை தயவுசெய்து

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமையில் அரசும் இல்லை, நீங்களும் இல்லை, நானும் இல்லை. ஆகவே, இந்த விஷயத்தைப் பற்றி நிச்சயமாக பரிசீலித்து சரியான முறையில் நடக்க வேண்டியவைகள் நடக்க முயற்சிகள் மேற்கொள்கிறோம். வேண்டுமென்றே இது இப்படிச் செய்யப்பட்டதாகத் தெரிந்தால், அதை எப்படித் தடுக்க வேண்டுமோ அப்படித் தடுக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு—நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு கீழ்க்கண்ட அறுவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன.

1. திரு. துரைமுருகன்
2. திரு. சி. பழனிமுத்து
3. திரு. ஏ. சி. சண்முகம்
4. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
5. திரு. க. பாலசுப்பிரமணியன்
6. டாக்டர் கே. பி. இராமலிங்கம்

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட அறுவரும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

ஆ. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு—நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு கீழ்க்கண்ட மூவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன:—

1. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
2. திரு. ஏ. சின்னதுரை
3. திரு. கே. எம். தங்கமணி

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட மூவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முபைப்படி தேர்ந். தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS